**செய்தி வெளியீடு எண்: 550** **நாள்: 07.09.2011**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (7.9.2011) தலைமைச் செயலகத்தில், 2010 – 2011ஆம் கல்வியாண்டில் தமிழை மொழிப் பாடமாகக் கொண்டு 10 மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று நிலைகளில் மதிப்பெண் பெற்ற பார்வையற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

2010 – 2011ஆம் கல்வியாண்டில் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவர்கள் தமிழை மொழிப் பாடமாகக் கொண்டு 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெற்ற ஜெ. விக்னேஷ்–க்கு 12,000 ரூபாய் ரொக்கப் பரிசும், இரண்டாம் இடம் பெற்ற மாணவர் ஜி. பிலிக்ஸ்–க்கு 9,000 ரூபாய் ரொக்கப் பரிசும், மூன்றாம் இடங்களை பெற்ற மாணவர்கள் பி. ராஜசேகர், எஸ். நந்தீஷ், பி. சசிகுமார் ஆகியோருக்கு தலா 6,000 ரூபாய் ரொக்கப் பரிசும் மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் இடம் பெற்ற மாணவர் ஆர். ஜெயபிரகாஷ்–க்கு 18,000 ரூபாய் ரொக்கப் பரிசும், இரண்டாம் இடம் பெற்ற மாணவர் ஆர். சரவணன்–க்கு 12,000 ரூபாய் ரொக்கப் பரிசும், மூன்றாம் இடம் பெற்ற மாணவர் எஸ்.கிருஷ்ணகுமார்–க்கு 9,000 ரூபாய் ரொக்கப் பரிசுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி, கல்வியில் சிறந்த முறையில் முன்னேறி எதிர்காலத்தில் நல்ல குடிமக்களாக உயர்ந்து வாழ்வில் நலன்கள் பல பெற வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறைச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நல மாநில ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

நாள்: 7.9.2011